**தலைப்பு 101 – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 101 - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 யூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ)உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட கீழே காட்டப்பட்ட பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தி தொடர்பு | அமுல்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1.1(அ) | அமைச்சிற்கு சொந்தமான 18-4263 ஆம் இலக்க வாகனத்தின் பெறுமதி (மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.) நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்காமை காரணமாக அப்பெறுமானத்தால் நிதியல்லாத சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | 1.6.1.(அ) ii |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக கணக்கீடு செய்த போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலாசார பிரிவுக்கு சொந்தமான CAM 5384, 254-0003 மற்றும் YC-1104 ஆம் இலக்க 3 வாகனங்கள் (மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை.) நிதிக் கூற்றுக்களில் வாகனங்களின் பெறுமதி உள்ளடக்கப்படாமை காரணமாக அப் பெறுமானத்தால் நிதி அல்லாத சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | CAM 5384, 254-0003 மற்றும் YC -1104 ஆம் இலக்க வாகனங்களை மதிப்பீடு செய்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும் | நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களின் பெறுமதி முறைப்படி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 செப்தம்பர் 21 ஆம் திகதி 6/2022 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 20 மற்றும் 21 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒழிக்கப்பட்ட செலவினத் தலைப்பிலான நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள், புத்தகங்கள் என்பன பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பிணை பதிவேடு ஒன்று புத்த சாசனப் பிரிவினால் தயாரிக்கப்படாத இருந்ததுடன் கலாசார பிரிவினால் நாளவது வாரையாக்கப்பட்டிருக்கவில்லை | புத்தசாசன பிரிவில் பிணை வைக்க வேண்டிய 25 பதவிகள் இனங்காணப்பட்டு அவர்கள் வைக்க வேண்டிய பிணை தொடர்பான பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது பிணை வைப்புத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | நிதி பிரமாணம் 891(1) இன் பிரகாரம் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்ட வகையில் பிணை பதிவேடு ஒன்று பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பான பிணை பதிவேடு பேனிச் செல்லப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **மூலதனச் செலவினம்** | | |
| அமைச்சின் புத்த சாசன பிரிவின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் நி.பி 66 இன் கீழ் 04 மூலதன செலவின விடயங்களுக்குரிய ரூபா 70,315,000 ஆன நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் அந்த மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டு இருந்தன | கருத்து தெரிவிக்கவில்லை | சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் முகாமைத்துவ விநியோகிக் கப்பட்டிருந்த DMA/06 மற்றும் 2011.12.23 ஆந் திகதிய ‘‘உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பு மதிப்பீடு தொடர்பான வழிகாட்டல்’’ என்ற தலைப்பில் மற்றும் அதற்குரிய ஏனைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்று பேணி செல்லப்படுகின்றது | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறான மீளாய்வொன்று எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். |

பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமா பூங்காவிற்காக சுத்திகரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் 2022/2023

அது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்காக சந்தை விலை ஒப்பிட்டு கேள்வி முறை பயன்படுத்தப்பட்டு அமைச்சின் பதிவு செய்யப்பட்டிருந்த வழங்குனர் களிடமிருந்து கேள்வி கோருவதற்கு அமைச்சின் சிறிய பெறுகை குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம் இப்பெறுகை செயற்பாட்டுக்கான மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதற்குரிய செலவினம் மதிப்பீடு ஒன்றும் கிரய மதிப்பீடு ஒன்றையும் குறித்த நிறுவனத்திடமிருந்து கோரப்பட்டுள்ளதுடன் கடந்த மாதங்களுக்குரிய செலவின மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது இது சரியானது அல்ல என்பதை ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் விலை விபரங்களை கோரும் போது அதனை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டப நிர்மாணம் கட்டம் 1 முதல் 5 வரை)<br>ரூபா 1,350 மில்லியன் ஆரம்ப | இனங் காணப்பட்ட குறைபாடுகளை திருத்தம் செய்வதற்காக விசேட மதியுரை சேவை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அந்த | கட்டிடத்தின் நிர்மாணங்களில் காணப்படும் குறைபாடுகளைப் பூர்த்தி செய்து |

மதிப்பீட்டின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் கட்டம் 05 வரையான நிர்மாண நடவடிக்கை களுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,245.18 மில்லியன் கிரயமொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் கட்டிடத்தின் நிரமாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டிருந்ததுடன் அதற்குரியதாக 2022 நவம்பர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) அத்திவாரத்தில் காணப்படும் பிழைகள் காரணமாக பிரதான கட்டிடத்திற்கு சமாந்திரமாக முன்னாலும் பின்னாலும் படிகள் கீழிறங்கி அவற்றின் நிலக்கல் கலன்று இருந்ததுடன் நுழைவு படிகள் மற்றும் தொடர்புடைய சுவர் வெடித்து கோடுகள் விழுந்தது காணப்பட்டன. கீழிறங்கியதை அதிக அளவில் அளவிடுவதற்காக தொடர்புடைய படிகள் மீது மணல் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

(ii) கட்டிடத்துக்குள் வெளியே நீர் சிந்தி காணப்பட்டதுடன் மத்திய காற்றுச் சீராக்கி முறைமையுடன் கூடிய அறையிலும் நீர் கசிவு காணப்பட்டது. நீர் தாங்கி நிறுவப்பட்டிருந்த இடத்தில் ஈரத்தன்மையின் பேரில் வெவ்வேறு பழங்கள்

ஆலோசனைகள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் குறித்த திருத்த வேலைகளை மேற்கொள்வதாக பொறியியல் சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு அறிவித்துள்ளதுடன் குறித்த நிறுவனத்தினால் தவறுகள் சீராக்கப்பட்டு வருகின்றது.

தற்போது இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் இனங் காணப்பட்ட தவறுகளை சீராக்குவதற்கு உட்பட்ட வகையில் 2023.05.09 ஆம் திகதி வரை வித்யாலங்கார பொறுப்பிற்கு கட்டிடம் கையளிக்கப்பட்டுள்ளது

பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும்.

விழுந்து பல இடங்களில் பாசி பிடித்திருந்தது.

(iii) கட்டிடத்தின் மேல் மாடியில் லின்டல்களில் சாந்து தட்டு கலன்று இருந்தது.

(iv) பிரதான மண்டபத்தில் பொருத்தப்பட்டிருந்த ஆசனங்கள் மீது பூஞ்சனை உருவாகியிருந்தவுடன் பொருத்தப்பட்டு இருந்த வசனங்கள் மீது திரைச் சீலைகள் அழுக்கடைந்து இருந்தமை சில திரைச் சீலைகள் பாதுகாப்பற்ற வகையில் அழுக்கடையும் வகையில் நிலத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(v) கட்டிடத்தில் பொருத்தப் பட்டிருந்த தீயணைக்கும் உபகரணம் 2019.11.10 ஆந் திகதி காலாவதியாக இருந்தது

(vi) கட்டிடம் அமைந்துள்ள வளவில் புற்கள் முளைத்திருந்ததுடன் வெவ்வேறு நாற்றுக்கள் வகைகள் கட்டிடத்தின் உட்புறம் வரை வளர்ந்து இருந்தன.

(vii) எவ்வாறாயினும் இம் மாநாட்டு மண்டபத்தை இந்த அறிக்கை திகதி வரை பயன்பாட்டுக்கு எடுக்காமல் விளைவற்று காணப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு அரசுக்குரிய வாகனங்களின் பதிவு உரித்து தொடர்பான சிக்கல்களை தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் கலாசார பிரிவினால் | வாகனங்களை எதிர்காலத்தில் கையேற்பதற்கோ அல்லது கையளிப்பதற்கு, அதற்குரிய நிறுவனங்களின் இணக்கப்பாடு தெரிவிக்கப்படா விட்டால் அந் நிறுவனங்களுக்கே விடுவிப்ப தற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | வாகனங்களின் பதிவு உரித்து தொடர்பாக சிக்கல்களைத் தீர்வு செய்து சட்டரீதியான உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்த KU – 1910, CAM-5384 மற்றும் 32-5805 ஆம் இலக்கங்களைக் கொண்ட 03 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | எடுத்தல் வேண்டும் |
| (இ) | கைதவிர்க்கப்பட வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த கலாசார பிரிவிற்கு சொந்தமான 301-4103, QY-1829 மற்றும் 18-7052 இலக்கங்களையுடைய 03 வாகனங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள வாகன நிறுத்துமிடமொன்றில் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்ததுடன் அவ் வாகனங்கள் தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 (II) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ‘ ஆம் பகுதியின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின் நடவடிக்கை எடுகக்க வேண்டிய போதிலும் குறித்த கையளித்தல்கள் அதற்கு இனங்க மேற்கொள்ளப்பட்டிருக்க் வில்லை. | இவ்வாகனங்களை கைதவிர்ப்பதற்கு பகிரங்க பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்ட போதும் 301-4003 மற்றும் 18-7052 இலக்கங்களையுடை வாகனங்களுக்காக போதியளவு கேள்வி முன் வைக்கப்படாமையால் விற்பனை செய்ய முடியாதிருந்தது. விளம்பரத்திற்காக ஏற்படும் செலவினத்தை குறைப்பதற்காக அமைச்சின் ஏனைய நிறுவனங்கள் கைதவிர்ப்பு விளம்பரங்களை வெளியிடும் சந்தர்ப்பங்களில் மீண்டும் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br><br>QY-1829 ஆம் இலக்க முச்சக்கர வண்டியின் அடிச்சட்டக இலக்கம் உள்ள இடம் சிதைவளைந்து அடிச்சட்டக இலக்கத்தை இனங்கான முடியாதுதால் பதிவு இரத்து செய்யப்பட்டு உடைந்த பொருட்களாக கைதவிர்ப்பதற்கு முடியாதிருந்தது. இது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து விசாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | தகவல் மற்றும் ஊடக அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திஸ்ஸமஹாராம ரன்மிஹிதன்னவில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ தொலைக்காட்சி சினிமா பூங்கா 2020 ஆகஸ்ட் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இந்த அமைச்சுக்கு அறிவிக்குமாறு ஊடக அமைச்சிலிருந்து செய்யப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் 08 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | |
|---|---|
| 09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் தேசிய உரிமைகள் கலை மற்றும் கிராமிய கலைகள் கலைஞர்கள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஊடக அமைச்சின் மேலதிக செயலாளரின் MMI/05/08/16 மற்றும் 2020 திசெம்பர் 4 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 9 வாகனங்கள் ரன்மிஹினிதன்னே பூங்காவிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சிக்கிடையே சொத்துக்களை மாற்றப்படும் போதும் கையேற்கும் போதும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி 01/2020 ஆம் இலக்க பொது அரசு நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் குறித்த கையளிப்பு அதற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக ஊடக அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் அரச உத்தியோசர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் அமைச்சின் புத்தி சாசன பிரிவில் பிணை வைக்க வேண்டிய 25 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய 25 பதவிகள் இனங்காணப்பட்டு அவர்கள் வைக்க வேண்டிய பிணை தொடர்பாக பிணை தொடர்பான பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது பிணைத் தொகை அறவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | நிதி பிரமாணம் 880 இன் ஏற்பாடுகளின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்பதிவ யாத்திரிகை ஒழுங்கமைப் பாளர்களை அமைச்சின் பதிவு செய்வதன் மூலம் தம்பதிவ சுற்றுலாவை மேற்கொள்பவர்களுக்கு சுதந்திர வீசாவை பெற்றுக் கொள்ளும் வசதிகளை செய்து கொடுத்தல் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிகளை வழங்குதல் மற்றும் யாத்திரிகர் களுக்கு கூடிய பாதுகாப்பு வழங்குதல் போன்ற சந்தர்ப்பங்கள் உரித்தான போதும் அவர்களுக்கு இவ்வாறு கிடைக்கும் இந்த வசதிகள் தொடர்பாக ஒழுங்கமைப்பாளர்கினால் யாத்திரிகர்களுக்கு அறிவூட்டும் முறையான வேலைத்திட்டமொன்று அமைச்சினால் செயல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. மேலும் சுதந்திர விசா வசதிகள் வழங்குவதன் மூலம் செலவினம் குறையும் நன்மைகள் யாத்திரிகளுக்கு உரித்தாகின்றதா என்பதை தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த சிக்கலுக்கு தீர்வொன்றாக மதிப்பீட்டு பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து சுற்றுலா ஒழுங்கு அமைப்பாளர் களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுற்றுலா முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் அந்த விண்ணபப்த்தை அமைச்சுக்கு கையளிக்க வேண்டும் அதன் அடிப்படையில் எதிர்வரும் பரிந்துரைகளை செய்தல் மற்றும் சுற்றுலாவில் பங்குபற்றியோரின் தொலைபேசி இலக்கத்தை பெற்றுக் கொண்டு அவர்களுக்கு மதிப்பீட்டு பத்திரம் ஒன்றை எழுமாறாக அனுப்பி தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது | ஒழுங்குபடுத்துனர் களையும் யாத்திரிகர் களையும் அறிவூட்டுவதற்கு முறையான வேலை திட்டமொன்றை செயல்படுத்த வேண்டியதுடன் யாத்திரிகர்களுக்கு கிடைக்கும் இலவச வீசா வசதிகள் அவர்களுக்கு கிடைக்கின்றதா என்பது தொடர்பான பின் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு முறையான வேலை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுதந்திர தின விழாவில் நடனங்களுக்கான உடைகளுக்காக அமைச்சின் கலாச்சார பிரிவினால் ரூபா 4,429,800 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த உடைகளை முறையாக நடன உடை களஞ்சியத்தில் வைக்காமை காரணமாக நடன ஆபரணங்களின் மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாமல் இருந்ததுடன் விளைவற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மேம்பாட்டு பிரிவின் பிரிவிலும் நடன உடை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த நடன உடைகளின் இருப்பு முறையாக கணக்கிடப்பட்டு சீஆர் புத்தகம் ஒன்றில் பதிவு செய்யப்பட்டு சரியான இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நடன ஆபரணங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் களஞ்சியப்படுத்த வேண்டும் எனவும் ஏனைய மாற்று சந்தர்ப்பங்களுக்காக பயன்படுத்துவதற்கு வேலை திட்டம் ஒன்று ஈடுபடுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசின் காணி ஒன்றில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ தேசிய தொலைக்காட்சி சினிமா பூங்கா, ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் காணப்பட்ட காலப் பகுதியின் போது அந்த அமைச்சிலிருந்து அமைச்சின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தாருக்கு விசேட நிபந்தனை பலவற்றின் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது. பூங்கா தேசிய உரிமைகள் கலைகள் மற்றும் கிராமிய கலை கலைஞர்கள் மேம்படுத்தும் அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு கையளிக்கப்பட்டு 02 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்த போதும் குறித்த காணியை அமைச்சுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அக்காணி வெகுசன ஊடக அமைச்சின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பெயருக்கு விசேட நிபந்தனைகள் சிலவற்றின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தால் காணியின் உரித்தை தீர்வு செய்வதற்காக பணிப்பாளர் நாயகத்தினால் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருந்தது நிறுவனத்தை திட்டவட்டமாக ஏதேனும் அமைச்சின் கீழ் கொண்டு வரை காணி கையளிக்கும் நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்பட்டிருந்த போதும் தற்போது திட்டவட்டமான அமைச்சரவை அமைச்சின் கீழ் வந்துள்ளதால் அந்த அமைச்சின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்திற்கு காணியின் உரித்தைக் கையளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | குறித்த அமைச்சிற்கு காணியின் உரித்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தேசிய நடன அரங்கேற்ற கலை நிலையத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) 2020 செப்டம்பர் 25 ஆம் திகதி முதல் தேசிய உரிமைகள் அரங்கேற்ற கலைகள் மற்றும் கிராமிய கலைஞர் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்பட்ட தாமரைக் கோபுர கலையரங்கம் 2022 ஜூலை 22 | இந்த நிறுவனத்தை சட்ட ரீதியான நிறுவனம் ஒன்றாக ஆக்குவதற்காக 2023.02.22 ஆம் திகதி கௌரவ புத்த சாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரின் | தாமரைக் கூட கலையரங்கு முறைப்படி கூட்டிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதி 2289/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல் அமைச்சின் கீழ் எடுக்கப்பட்டிருந்த போதும் நடன அரங்கை முறைப்படி கூட்டிணைத்தல் மேற்படி அமைச்சினால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2023.03.28 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் கிடைத்துள்ளது அந்த தீர்மானத்தின் பிரகாரம் இந்த நிறுவனம் அரசு தனியார் பங்குடைமை முறையின் கீழ் முகாமை செய்வதற்காக அமைச்சரவையில் விஞ்ஞானம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | |
| (ii) | 2020 சனவரி 09 ஆந் திகதிய அரச கணக்குகள் பணிப்பாளரின் SA/AMP/ Deposit/Transfer ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கலையரங்கத்தின் வருமானத்திற்காக வருமானத் தலைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அது தொடர்பாக தேவையான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கலையரங்கத்திற்காக வருமானம் மற்றும் செலவினத் தலைப்பினை அங்கீகரித்துக்கொள்வதற் காக திறைசேரியுடன் கலந்துரையாடி கடிதமொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அரச கணக்குகள் பணிப்பாளரின் பரிந்துரையின் பிரகாரம் கலையரங்கத்தின் வருமானத்திற்காக வருமானத் தலைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படுகின்ற வெவ்வேறு கட்டணங்களை அதிகரிக்காமல் காணப்படுகின்ற அனைத்து அரசு நிறுவனங்களினாலும் குறித்த வரிசை அமைச்சின் செயலாளரின் அனுமதி பெற்று கட்டணங்களை 15 சதவீதமோ அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அமைச்சினால் அறவிடப்படுகின்ற கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2020/2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொரோனா நிலைமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் எரிபொருள் பிரச்சினை காரணமாக இந்த அரங்கத்தை ஒதுக்குவதற்காக ஒதுக்கீடு குறைந்து மட்டத்தில் காணப்பட்டது அவ்வாறு காணப்பட்ட நிலையில் அல்லது பராமரித்து செல்வதற்கு நேர்ந்ததால் இக்கட்டணங்களை திருத்தம் செய்யப்படாது இருந்ததுடன் கட்டணங்களை திருத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சேவைக் கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | விஞ்ஞாபனத்திற்காக 2023.03.28 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் கிடைத்திருந்தது. அத் தீர்மானத்தின் பிரகாரம் இந்நிறுவனம் அரசு தனியார் பங்குடைமை நடைமுறையில் முகாமை செய்வதற்காக 2023.04.18 ஆம் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (iv) | கலையரங்கத்தை வாடகை அடிப்படையில் வழங்கும் போது சில தரப்பினரிடமிருந்து மாத்திரம் சலுகை விலை விவரங்கள் அடிப்படையில் வாடகை தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் (கழிவு வழங்குதல்) அவ்வாறு சலுகை விலையில் வழங்குவதற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | கொழும்பு பல்கலைக்கழகத்தின் சங்கைக்குரிய உபவேந்தர் அவர்களை வரவேற்பதற்காக கலையரங்கத்தை இலவசமாக அல்லது சலுகை விலையில் ஒதுக்கீடு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் கருதிக் கொள்ளப்பட்டு 15% கழிவு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் சான்றிதழ் வழங்கும் விழாவிற்காக முழுத்தொகையில் 15% சதவீத கழிவு அரச நிறுவனங்களுக்கு சலுகை விலை அடிப்படையில் வழங்குவதை கருத்திற் கொண்டே வழங்கப்பட்டிருந்தது. | வாடகையை அறவிடும் போது அங்கீகரிக்கப்பட்ட விலை விபரங்களுக்கு புறம்பாக அறவிடப்பட்டிருந்தால் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (v) | நிதிப் பிரமாணம் 3(1) இன் பிரகாரம் அரசின் அனைத்து செயற்பாடுகளும் முன்னால் தீர்மானிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் இருந்து குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் கலையரங்கிற்காக உரிய செலவினத்தை | இதற்காக செலவினை விடயமொன்று அங்கீகரிக்கப்படாதிருந்த மையால் வருடாந்த மதிப்பீட்டிக்கு இச்செலவினத்தை உள்ளடக்க முடியாமல் போனது. எதிர்காலத்தில் | கலையரங்கிற்காக செலவினங்களை மேற்கொள்ளும் போது வருடாந்த செலவின மதிப்பீட்டைத் தயாரித்து பாராளுமன்றத்தின் |

| | | |
|---|---|---|
| மேற்கொள்வதற்காக அவ்வாறு திட்டமிடப்படாதிருந்ததுடன் அச்செலவினத்தை வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கி பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலவின விடயம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வருடாந்த செலவின மதிப்பீட்டிற்கு உள்ளடக்குவதற்காக சமர்ப்பிப்பதாக தயவுடன் அறிய தருகிறேன். | அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்தாக |
| (vi) ஏதேனும் மாதமொன்றின் மின்சார பட்டியல் கிடைத்து 15 நாட்களுக்குள் கொடுப்பனவு செய்ய்பபட வேண்டியதுடன் தாமதமான கொடுப்பனவிற்காக 16 ஆந் நாள் முதல் 1.2 சதவீதம் மாதாந்த வட்டி நிலுவை பட்டியல் பெறுமதியில் அறவிடப்படுகின்றது.<br>எவ்வாறாயினும் கலையரங்கத்தின் மாதாந்த மின்சாரப் பட்டியல் 15 நாட்களுக்குள் கொடுப்பனவு செய்யாமை காரணமாக 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 460,419 ஆன மேலதிக தொகை மிகை அறவீடாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தற்போது இந்நிலைமையை தவிர்த்து சரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 ஆகஸ்ட் மாத பட்டியல் தவிர இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 455,914 நிலுவை தொகை செலுத்தப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி மின்சார பட்டியல்களை கொடுப்பனவு செய்ய வேண்டுமெனவும் செலுத்தப்பட்டுள்ள மிகை அறவீட்டு தொடர்பாக நி.பி 156 மற்றும் 210 (2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (vii) நிறுவனத்தினுள் மூன்று தனியார் நிறுவனங்களின் மூலம் நடத்திச் செல்லப்படும் தொலைதொடர்பு அன்டனாவுக்காக சேவை வழங்குவதற்காக அறவிடப்படும் குத்தகை வாடகை மற்றும் மின்சார செலவினம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| • தொலைத்தொடர்பு அன்டனாக்களை பராமரித்துச் இரண்டு செல்லும் தனியார் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை 2022 திசெசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதும் புதிய உடன்படிக்கை களுக்கு வராமை காரணமாக விலை விபரங்களை திருத்தம் செய்து கூடுதலான | • தற்போது இந்நிறுவனங்களை அழைத்து கலந்துரையாடி விலை விபரங்களை கோரியுள்ளதுடன் அடுத்த மாத காலப் பகுதியில் புதிய உடன்படிக்கைளைக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை காலம் முடிவடைந்தவுடன் புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமானத்தை உழைக்க கூடியதாக இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| • உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதம் 10 ஆம் திகதி குத்தகை வாடகை செலுத்த வேண்டிய போதிலும் மேலே குறிப்பிட்ட தொடர்புடைய நிறுவனங் களிடமிருந்து தவணைத் தொகை முறைப்படி அறுவிடப்படாமல் இருந்தருடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது வாடகை கூலி கொடுப்பனவு தாமதத்தின் பேரில் அறவிடப்பட வேண்டிய தண்டப்பனத் தொகை குறிப்பிடப்படா மையால் தாமத தண்டப் பணத்தை அறவிடுவதற்கு முடியாது இருந்தது. | • மேற்கொள்ளப்படும் புதிய உடன்படிக்கையின் போது இந் நிலைமையை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் புதிய உடன்படிக்கையில் இது தொடர்பாக புதிய நிபந்தனை ஒன்றை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து நிபந்தனைகளையும் உள்ளடக்கி தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| • கலையரங்கம் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு இடையேயான உடன்படிக்கையின் பிரகாரம் தொலைத்தொடர்பு அன்டனாவொன்றை பராமரித்து செல்வதற்கான மின்சார செலவினம் அந்நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டு கலையரங்கத்தினால் தீர்வு செய்யப்பட வேண்டும். எனினும் மேற்படி நிறுவனங்களிடமிருந்து 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 1,255,465 தொகையை அறவீடு செய்து தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.˙. | • பெறவேண்டிய நிலுவை கட்டணங்கள் தொடர்பாக சரியாக கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் குறித்து நிறுவனத்திடம் இருந்து அமைச்சிக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை மின்சார கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கான மின்சாரப் பட்டியலை சரியாக இனங்கண்டு உரிய நிறுவனங்க ளிடமிருந்து அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | மிக உயர்ந்த பொருளதார பெறுமதியுடைய கலையரங்கில் 400 சதுர அடி அளவிலான நிலத்தை பயன்படுத்தி தரைப்படையினால் சிற்றுண்டிச்சாலை ஒன்று நடத்திச் செல்லப்படுவதுடன் அவ்வளவிற்கு உரிய சுத்திகரிப்பிற்கான பட்டியல், மின்சார பட்டியல் மற்றும் நீர்ப் பட்டியல் என்பன கலையரங்கினால் ஏற்கப்பட்டிருந்தது எவ்வாறாயினும் வளவினைப் பயன்படுத்துவதற்காக தரைப்படையிடமிருந்து எவ்வித வாடகையொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கலையரங்கில் சேவையில் ஈடுபட்டுள்ள முப்படையின் உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய தரப்பினரும் கடமையில் ஈடுபடுகின்றதால் அவர்களின் நாளாந்த தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு இச் சிற்றுண்டிச்சாலையை நடத்திச் செல்லப்படுகின்றது எவ்வாறாயினும் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக அமைச்சுடன் இணைந்து கலந்துரையாடி வருவதாக தயவுடன் அறியத் தருகிறேன். | மிக உயர்ந்த பொருளாதார பெறுமானத்துடன் கூடிய கலையரங்கின் வளவில் மின்சாரப் பட்டியல் சுத்திகரிப்பு பட்டியல் நீர் பட்டியல் போன்றவற்றை கலையரங்கின் மூலம் ஏற்கப்படுவதால் மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் வாடகை தொகை அறவிடப்பட வேண்டும். |

(உ) மலைநாட்டு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இடைக்கால சபை தொடர்பாக பின்வரும்அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | மலைநாட்டு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இடைக்கால சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதற்காக ஏனைய நிறுவனங்கள் காணப்படுவதால் மேலும் மலை நாட்டு மரபுரிமைகளை பாதுகாப்பதற்காக புறம்பான செயற்திட்டமொன்று பேணிச் செல்லும் தேவைப்பாடு இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இந்நிறுவனத்தை மேலும் நடாத்திச் செல்லும் தேவைப்பாடு தொடர்பாக புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் உடன் கலந்துரையாடி வருவதாகவும் அதன் பின்னர் எதிர்வரும் நடவடிக்கை மேற்கொள் வதாகவும் தயவுடன் அறியத் தருகிறேன் | மலைநாட்டு உரிமைகளைப் பாதுகாப்பதற்காக புறம்பான செயற்திட்டமொன்றை பேணிச் செல்லும் தேவைப்பாடு தெடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | மலைநாட்டு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இடைக்கால சபை தொடர்பாக அலுவலக வளவிக்காக கண்டி மாநகர சபை எல்லையில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்று குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் அமைச்சினால் ஆதனத்தில் | இத்தொகையானது கட்டிடத்தின் பொருத்திகளுக்காக குத்தகையாளர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாகும். குறித்த பொருத்திகளுடன் கட்டிடம் குத்தகையாளருக்கு திருப்பி வழங்கப்பட்டால் இத்தொகையை | பொருத்திகள் மற்றும் நிர்மாணங்களின் மதிப்பீட்டு பெறுமதியை குத்தகையாளரிடமிருந்து அறவிடுவது தொடர்பாக குத்தகை உடன்படிக்கையில் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6,194,607 ஆன பொருத்திகள் மற்றும் நிர்மானங்களுக்காக குத்தகை உடன்படிக்கையின் இறுதியில் காணப்படும் மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் குத்தகை வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் புதிய குத்தகை உடன்படிக்கையில் அந்த நிபந்தனையை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அறவிடுவதற்கு முடியும். எனினும் இக்கட்டிடத்தில் தற்போது மலைநாட்டு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இடைக்கால சபை நடாத்தி செல்லப்படுவதால் கட்டிடத்திலிருந்து வெளியேறும் போது இறுதி மாதங்களில் குத்தகை வாடகையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை இருப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். | |

(ஊ) முழு உரிமையுடனான அமைச்சுக்கு சொந்தமான கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண (தனி) கம்பெனி தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | கலாசார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் நிர்மாண மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை செயற் திறனாக நிறைவேற்றும் நோக்கில் அமைச்சுக்கு முழுமையான பங்கு உரித்துடன் பதிவு செய்யப்பட்டிருந்த கலாச்சார பாதுகாப்பு மற்றும் நிர்மாண தனியார் கம்பெனி 2018/2019, 2019/2020 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் நிதியாண்டு களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வவிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இக் கம்பெனி ஆரம்பித்தல் அல்லது அதன் விடயப்பரப்பு தொடர்பான கோவைகள் அமைச்சின் விடயப் பரப்பு மற்றும் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்கள் அவ்வப்போது திருத்தம் செய்யப்படும் போது வெவ்வேறு பிரிவிற்கு கையளிக்கப்பட்டடை காரணமாக தேவையான கோவைகளை கண்டுபிடிப்பதில் சிரமமாக காணப்படுகின்றது. | குறித்த ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குது சமர்ப்பிக்கப்பட வேண்டுமென |
| (ii) | தற்போது நடவடிக்கைகள் முழுமையாக செயலற்று இருப்பதால் கம்பெனியை கலைப்பதற்கு 2021 ஜூலை 05 ஆம் திகதி பிரதமரின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதும் | கம்பெனியைக் கலைப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு புதிய அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை | செயலற்ற கம்பெனிகளை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| கலைப்பு செயற்பாடுகள் இவ்வறிக்கை திகதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. | |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) மற்றும் 40(3) பிரிவுகளின் பிரகாரம் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 07 கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக கருத்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை பதில் அனுப்பப்படாத உள்ளக கணக்காய்வு விசாரணை களுக்கான பதிலை வழங்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைக்காக தாமதம் இன்றி கருத்து தெரிவித்தல் வேண்டும் |
| (ஆ) | 2019 ஜனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019 இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரிக்கும் போது நிதி பிரமாணம் 134(2) இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வு திட்டங்களை தயாரிக்கும் போது தேவைப்பாட்டின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி பிரமாணம் 134(2) இன் படி உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | அமைச்சின் கலாசார பிரிவிற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட பதவியணியினர் மற்றும் நாடு பூராவும் அமைந்துள்ள 208 கலாசார நிலையங்களில் செயற்பாட்டில் காணப்பட்ட போதும் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வருடக் கணக்காக வெற்றிடமாக காணப்பட்டது | வெற்றிடமாக காணப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவரை இணைக்குமாறு அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் இலக்கம் 38(ஊ) பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரை உள்ளடக்கிய பிரிவொன்று தாபிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | விடுக்கப்பட்டுள்ளது தற்போது மேற்படி வெற்றிடப் பதவியில் 2022.03.15 ஆம் திகதி முதல் பௌத்த அலுவல் திணைக்களத்தின் கணக்காளர் பதில் கடமையில் ஈடுபட்டுள்ளார் | |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் புத்தசாசன பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 219 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 164 ஆகவும் இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 55 ஆகும். வெற்றிடங்களை நிரப்பாமையால் அமைச்சின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமொன்று ஏற்படுத்துவது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2023 மார்ச் மாதத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த புத்த சாசன பிரிவிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 219 இலிருந்து 180 வரை குறைக்கப்பட்டுள்ளது. 2022.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட பணிப்பாளர் பதவி தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்தல் வேண்டும். |
| (ஆ) கலாசார பிரிவிற்காக 201 உதவி மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் உள்ளவாரான எண்ணிக்கை 133 ஆக இருந்ததுடன் 68 பதவிகளுக்கு அதாவது 34 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டதுடன் கலாச்சார பிரிவுக்காக அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 141 ஆக இருந்த போதும் | இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொனறு விசாரிக்கப்பட்டு வருவதால் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்ய முடியாமல் உள்ளது. அவ்வாறே அரசு கொள்கையொன்றின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகள் பின்னர் அங்கீகரிக்கப்படும் அடிப்படையில் அனைத்து அரசாங்க | அங்கீகரிக்கப்பட்ட பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும் |

| | |
|---|---|
| உள்ளவாறான எண்ணிக்கை 187 ஆக இருந்தனையால் 46 பதவிகளில் அதாவது 33 சதவீதம் மிகை ஒன்று காணப்பட்டது. | நிறுவனங்களுக்கும் இணைக்கப்பட்டுள்ளனர் இந்த புதிய ஆட்சேர்ப்பு அமைச்சின் பதவியணிக்காக அங்கீகாரம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. |